பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 07 2025 **THURSDAY** 7 15 **AM**

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கானா, டிரினிடாட் டொபாகோ, அர்ஜென்டினா, பிரேஸில், நமீபியா ஆகிய ஐந்து நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தாயகம் புறப்பட்டார்.

2. பருத்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்காக கோவையில் நாளை உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், ரயில்வே துறையில் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணிநியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

4. பிரேஸில், இலங்கை உள்ளிட்ட எட்டு நாடுகள் மீது புதிய இறக்குமதி வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

5. இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

**>>>>>><<<<<<**

கானா, டிரினிடாட் டொபாகோ, அர்ஜென்டினா, பிரேஸில், நமீபியா ஆகிய ஐந்து நாடுகள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி தாயகம் புறப்பட்டார்.

தமது பயணத்தின் கடைசி கட்டமாக நேற்று அவர், நமீபியா சென்றார்.

அங்கு அந்நாட்டு அதிபர் திருமதி. **Netumbo Nandi – Ndaitwah-**வை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தார்.

இந்த சந்திப்பின் போது பிரதமருக்கு நமீபிய நாட்டின் உயரிய விருதை அந்நாட்டு அதிபர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

**>>>>>><<<<<<**

கிழக்கு மண்டல குழுமத்தின் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

ராஞ்சியில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஜார்கண்ட், பீகார், ஒடிசா மற்றும் மேற்குவங்க மாநிலங்களைச் சேர்ந்த 70 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநிலங்களுக்கு இடையேயான விவகாரங்களுக்கு தீர்வு காண்பது, முந்தைய கூட்டங்களின் போது மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் அமலாக்கம் குறித்து இதில் விவாதிக்கப்படவுள்ளது.

ஒடிசா சார்பில் அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன்சரண் மஞ்சி, பீகார் சார்பில் துணை முதலமைச்சர் திரு. சம்ராத் சௌத்ரி, மேற்குவங்கம் சார்பில் அம்மாநில அமைச்சர் சந்திரிகா பட்டாச்சார்யா, ஜார்கண்ட் சார்பில் முதலமைச்சர் திரு. ஹேமந்த் சோரன் மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றன.

>>>>>><<<<<<

தெலங்கானாவில் கரீப் பருவத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய ரசாயனத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி தலைமையிலான குழுவினர் தம்மை சந்தித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

தெலங்கானா மாநில விவசாயிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும் என்று அவர் உறுதியளித்தார்.

மாநிலத்தில் அதிகரித்து வரும் யூரியா பயன்பாடு மண்வளத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று அவர் கவலை தெரிவித்தார்.

விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்ப உரங்களின் விநியோகத்தை தடையின்றி மேற்கொள்ள வேண்டும் என்று துறை சார்ந்த அதிகாரிகளுக்கு திரு. ஜெ.பி. நட்டா அறிவுறுத்தினார்.

>>>>>><<<<<<

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், ரயில்வே துறையில் 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணிநியமனங்கள் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டு இறுதியாண்டுக்குள் மேலும் 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று கூறியுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் ரயில்வே பணியாளர் தேர்வு வாரியம் மூலம் 55 ஆயிரத்து 197 காலிப் பணியிடங்களுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது.

இதில் 1 கோடியே 86 லட்சம் பேர் பங்கேற்றதாகவும் அது கூறியுள்ளது.

அடுத்த நிதியாண்டு முதல் மேலும் 50 ஆயிரம் வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பிரதமரின் கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், நான்காவது கட்டமாக 46 ஆயிரம் கிலோமீட்டர் தொலைவிற்கு புதிய சாலைகள் அமைக்கப்படவுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. கம்லேஷ் பஸ்வான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக மத்திய அரசு 76 ஆயிரம் கோடி ரூபாய் நிதி வழங்கும் என்று கூறினார்.

எனவே, பீகார் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களும் இதுதொடர்பான அறிக்கைகளை உடனடியாக சமர்ப்பிக்குமாறு திரு. கமலேஷ் பஸ்வான் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

பருத்தி உற்பத்தியை மேம்படுத்துவதற்காக கோவையில் நாளை உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெறவிருப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் பருத்தியை தாக்கும் வைரஸ் தாக்குதல்களை தாங்கி வளரக்கூடிய பருவநிலைக்கேற்ற உயர் ரக பருத்தி விதைகளை உருவாக்கவும், உற்பத்திச் செலவுகளை குறைக்கும் விதமாக கோவையில் நாளை ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ததற்காக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சௌஹானுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

பருத்தி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், விவசாய அமைப்புகள், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் தலைமை இயக்குநர் உட்பட புகழ்பெற்ற விஞ்ஞானிகள் பருத்து உற்பத்தி செய்யும் மாநிலங்களின் வேளாண் அமைச்சர்கள், மாநில அரசு அதிகாரிகள், பருத்தி தொழில்துறை சார்ந்தவர்கள் கலந்து ஆலோசிப்பதன் மூலம் உரிய தீர்வை எட்ட முடியும் என்று தாம் நம்புவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மக்களின் மனநிறைவை உறுதி செய்யும் வகையில், குறைதீர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார்.

பொதுமக்களின் குறைகளை உரிய வகையில் நிவர்த்தி செய்வது தொடர்பாக புதுதில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய பயிலரங்கில் அவர் உரையாற்றினார்.

கொள்கைகளை வகுப்பதிலும், குறைபாடுகளை களைவதிலும் இதனை வாய்ப்பாக கருத வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

குறைதீர்ப்பு நடவடிக்கைகள் வாழ்க்கை முறைகளை எளிதாக்கும் கருவியாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஆண்டுதோறும் 26 லட்சத்திற்கும் மேற்பட்ட குறைகள் தொடர்பான மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இது, நம்பிக்கை மற்றும் குறைதீர்ப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை பிரதிபலிப்பதாக திரு. ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

பிரேஸில், இலங்கை உள்ளிட்ட எட்டு நாடுகளுக்கு புதிய இறக்குமதி வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த இறக்குமதி வரி விதிப்பு, அடுத்த மாதம் முதல் அமலுக்கு வருவதாக அவர் கூறியுள்ளார்.

அதிகபட்சமாக பிரேஸிலுக்கு 50 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை, ஈராக், அல்ஜீரியா, லிபியா நாடுகளுக்கு 30 சதவீத வரியும், மால்டோவா, புருனே நாடுகளுக்கு 25 சதவீத வரியும், பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு 20 சதவீத வரியும் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்நாடுகள் வரி விதிப்பை அதிகரித்தால், அவைகள் மீது மேலும் அதிக வரி விதிக்கப்படும் என்று திரு. டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்த நாடுகள் தங்களது வர்த்தக கொள்கைகளை திருத்தியமைத்தால், வரி விகிதம் குறைக்கப்படும் என்றும் திரு. ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தெற்காசியாவில் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் ஒரு கோடியே 80 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகள் ரத்தசோகையால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக உலக சுகாதார அமைப்பு, யுனிசெஃப் மற்றும் சார்க் அமைப்புகள் எச்சரித்துள்ளன.

கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் அந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் இதுகுறித்து குறிப்பிட்டனர்.

இதையடுத்து, உரிய நடவடிக்கைகளை தெற்காசிய நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

>>>>>><<<<<<

யுக்ரைன் மீது நேற்று 728 ட்ரோன்கள் மற்றும் 13 ஏவுகணைகள் மூலம் ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக யுக்ரைன் அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதில் 711 ட்ரோன்களையும், 7 ஏவுகணைகளையும் யுக்ரைன் விமானப்படை சுட்டு வீழ்த்தியதாக அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையே, யுக்ரைன் நடத்திய தாக்குதலில் ரஷ்யாவின் மேற்குப்பகுதியில் உள்ள **Kursk** நகரில் 3 பேர் உயிரிழந்ததாகவும், 7 பேர் காயமடைந்ததாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

மத்திய பிரதேசம், சத்திஷ்கட் உள்ளிட்ட மாநிலங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்தரபிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இங்கிலாந்து அணிக்கு எதிரான 4வது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

எமிரேட்ஸ் ஓல்டு ட்ராஃபோர்டில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 126 ரன் எடுத்தது.

127 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 17 ஓவரில் 4 விக்கெட்களை இழந்து, இலக்கை எட்டியது.

இதன்மூலம் 5 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை இந்தியா 3-1 என்ற ஆட்டக்கணக்கில் வென்றது.

>>>>>><<<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

லண்டனில் நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

**>>>>>><<<<<<**

எம்.சி.சி. - முருகப்பா தங்கக் கோப்பைக்கான ஹாக்கிப் போட்டி இன்று சென்னையில் தொடங்குகிறது.

**>>>>>>END<<<<<<**